<u>4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு V. ஜான் மினோ, பி.ஏ. பி. எல்,** 4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை(பொறுப்பு) அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண்.203/2019**

**நாள்: 04.09.2024** **வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சசிக்குமார் | தொழில் | : மருத்துவர் |
| த/பெ | : மனோகரன் | கிராமம் | : வடமதுரை |
| வயது | : 47 | தாலுகா | : |
| ஜாதி | : | மாவட்டம் | : திண்டுக்கல் |
| சமயம் | : | | |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

03.02.2019 அன்று என்னிடம் தொகை ரூ.30 லட்சம் இருந்ததை காட்டக்கூடிய ஆவணம் உள்ளதா என்றால் நான் கமர்சியல் காம்பளக்ஸ் வைத்துள்ளதால் அதிலுள்ள அட்வான்ஸ் தொகை எனது கைவசம் இருந்தது. அந்த தொகையை நான் வருமானவரி கணக்கில் காண்பித்துள்ளேன். பிரதிவாதிக்கு கொடுத்த தொகையை நான் எனது வருமானவரி கணக்கில் சொல்லியுள்ளேன். யார் யார் எவ்வளவு தொகை எனக்கு அட்வான்ஸ் தொகை கொடுத்தார்கள் என்றால் நான் குறிப்பு எழுதி வைத்துள்ளேன் தற்போது என்னால் ஞாபகப்படுத்தி கூறமுடியவில்லை. கடன் தேதிக்கு எவ்வளவு நாட்களுக்கு முன்னர் அட்வான்ஸ் தொகைகளை நான் பெற்றேன் என்றால் தற்போது சுமார் 7 வருடங்கள் ஆகிவிட்டதால் என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை. தோராயமாக நாட்களை சொல்லமுடியுமா என்றால் இயலாது. யார் யார் அட்வான்ஸ் தொகைகளை கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் இயலாது. அந்த வருமானவரி கணக்கை இதுவரை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடன் தொகைக்கு தாவா பிராமிசரிநோட்டை தவிர பிரதிவாதியிடமிருந்து வேறு எந்த ஆவணத்தையும் நான் பெறவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியிடமிருந்து கடன் தொகைக்காக சொத்து ஆவணங்கள் பெறவில்லை என்றால் சரிதான்.

ரூபாய் 2 லட்சத்திற்கு மேல் பணம் பரிவர்த்தனை செய்யும்போது வங்கி மூலம்தான் பரிவர்த்தனை செய்யவேண்டும் என்று சொன்னால் சரிதான். 03.02.2019 அன்று நான் பிரதிவாதிக்கு தொகை ரூ.30 லட்சத்தை கொடுத்ததை எனது வருமானவரி கணக்கை காண்பித்துள்ளதாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா தொகையை திருப்பி கேட்டு நான் பிரதிவாதிக்கு வழக்கறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். வாய்வார்த்தை மூலம் தாவா தொகை திருப்பி கேட்டேன். எப்போது எத்தனை முறை தொகையை நான், பிரதிவாதியிடம் கேட்டேன் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் பலமுறை கேட்டேன். தாவா பிராமிசரி நோட்டானது எந்த சாட்சிகள் முன்னிலையில் எழுதப்பட்டது என்பது சம்மந்தமான சாட்சிகளின் பெயர் விவரங்கள் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். கடன் தொகை எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்ற விவரம் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 03.02.2019 அன்று தாவா பிராமிசரி நோட்டில் உள்ள விவரங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 03.02.2019 அன்று தாவா பிராமிசரிநோட்டில் உள்ள விவரங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் சாட்சிகளின் பெயர் விவரங்களை நான் வழக்குரையில் சொல்லியிருப்பேன் என்றால் எல்லா விவரங்களையும் பிராமிசரிநோட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதால் சாட்சிகளின் பெயர் விவரங்களை வழக்குரையில் சொல்லவில்லை. கடன் தொகை எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்ற விவரம் தாவா பிராமிசரி நோட்டில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எங்கு வைத்து கடன் தொகை கொடுக்கப்பட்டது என்றால் உடுமலைப்பேட்டையில் உள்ள எனது மருத்துவமனையில்வைத்து பிரதிவாதிக்கு நான் பிராமிசரி நோட்டில் உள்ள தொகையை நான் கடனாக கொடுத்தேன். மருத்துவமனையில் எத்தனை செவிலியர்கள் எனக்கு கீழ் பணிபுரிந்து வருகிறார்கள் என்றால் 7 வருடங்கள் ஆவதால் என்னால் சரியாக சொல்லமுடியவில்லை. எனக்கு கீழ் எத்தனை பணி மருத்துவர்கள் பணிபுரிந்தார்கள் என்றால் நானும் எனது மனைவி மட்டும்தான் அங்கு பணிபுரிந்தோம். எனது மனைவியும் மருத்துவர்தான். நான், பிரதிவாதிக்கு கடன் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா பிராமிசரிநோட்டில் எனது மனைவி சாட்சி இல்லை. தாவா பிராமிசரி நோட்டில் சாட்சி கையொப்பம் செய்துள்ள நபர் யார் என்றால் வீரையா மற்றும் வீரணன் ஆகியோர்களை பிரதிவாதி அழைத்து வந்தார். தாவா பிராமிசரி நோட்டில் வீரையா, S/o.சவடன், நல்லகேனிதெரு, தேவரப்பண்பட்டி. K.வீரணன், S/o.V.கரிவீரன், பூஞ்சோலை தெரு, தேவரப்பண்பட்டி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராமிசரி நோட்டில் கையொப்பம் இட்டுள்ள சாட்சிகளை எனக்கு தெரியாது என்றால்

பிரதிவாதியுடன் பலமுறை எனது மருத்துவமனைக்கு சாட்சிகள் வந்துள்ளார்கள். சாட்சிகள் எதற்காக எனது மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் புறநோயாளியாக சிகிச்சைக்காகவும் வந்தார்கள். தாவா பிராமிசரிநோட்டிற்கு சாட்சிகளாகவும் வந்தார்கள். தாவா பிராமிசரிநோட்டில் உள்ள சாட்சிகளுக்கும் எனக்கும் பழக்கம் உண்டா என்றால் உண்டு. தாவா பிராமிசரிநோட்டில் உள்ள சாட்சிகள் திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பிரதிவாதி உடுமலைப்பேட்டை யூகேபி நகரில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். தாவா பிராமிசரிநோட்டில் உள்ள சாட்சிகள் தற்போதும் எனக்கு பழக்கம் ஆனவர்கள் என்றால் சரிதான். எனக்கு பழக்கமான சாட்சிகளை வைத்து தாவா பிராமிசரிநோட்டை போலியாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராமிசரி நோட்டு சாட்சிகளை பிரதிவாதி அழைத்து வரவில்லை என்றால் சரியல்ல. தாவா பிராமிசரிநோட்டை யார் எழுதியது என்றால் வீரணன் எழுதினார். வா.சா.ஆ.1 பிராமிசரிநோட்டில் மேல்பகுதியில் 2019 என குறிப்பிடப்பட்டுள்ளதில் "0"–வின் மீது மேலேழுத்து செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. உடுமலைப்பேட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1–ல் STC No.5/2019 என காசோலை மோசடி வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். STC No.5/2019 வழக்கில் செல்வம் என்ற முத்துசாமி மீது தாக்கல் செய்துள்ளேன். அதில் தொகை ரூ.15 லட்சம். உடுமலைப்பேட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2–ல் STC No. 807/2023 என காசோலை மோசடி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் தொகை ரூ.25 லட்சம் என்றால் சரிதான். திருமதி பிந்துமோள் என்பவர் மீது அந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். உடுமலைப்பேட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2–ல் STC No. 506/2023 என காசோலை மோசடி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். திருமதி பிந்துமோள் மற்றும் அவரது கணவர் பிரதாப் ஆகியோர் மீது அந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். எவ்வளவு தொகைக்கு அந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்பது எனக்கு ஞாபகம் இல்லை. நான் தற்போதும் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் மருத்துவ தொழிலோடு கடன் கொடுக்கல் வாங்கல் தொழிலையும் செய்து வருகிறேனா என்றால் கடன் கொடுக்கல் வாங்கலை நான் தொழிலாக செய்யவில்லை. நண்பர்கள் என்ற அடிப்படையில் நான் எனது நண்பர்களுக்கு கடனுக்கு தொகை கொடுத்தேன். நான் கந்து வட்டி கேட்டு தொழில் செய்து வந்ததாக என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு உடுமலைபோலீசார் உடுமலைப்பேட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1–ல் STC No.448/2023 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால்

எனக்கு அது பற்றி தெரியாது. வா.சா.ஆ.1ல் சொல்லப்பட்டுள்ளபடி பிரதிவாதி என்னிடம் எந்த கடன் தொகையும் பெறவில்லை என்றால் சரியல்ல. வேறு நபர் என்னிடம் கொடுத்த வா.சா.ஆ.1 பிராமிசரிநோட்டை பயன்படுத்தி பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

V JOHN MINO
Digitally signed by V JOHN MINO
Date: 2024.09.04 17:41:40 +0530

4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி, (பொறுப்பு)
உடுமலைப்பேட்டை.